# வடக்கு கிழக்கு வன்னி விழிப்புலனற்றோர் சங்கம்

பதிவிலக்கம்: - NSPD/10/R-249

**தொலைபேசி இலக்கம்**: -021-2283080

077-1763915

## நிர்வாகத்தெரிவு

2026 05.30

Vanni Association for Visually Handicapped,

Kilinochchi.

" விழியின் இழப்பு வாழ்வின் இழப்பல்ல"

"

- **பார்வையற்ற சமூகத்தினரும் உலக வாழ்வியல் நீரோட்டத்தில் அனைத்து செயல்முறைகளிலும் இணைநிலைத் தன்மையோடு பண்புடைய மனிதர்களாக தன்மதிப்புடன் வாழ வழிசெய்யும் நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு,**

  **வடக்கு, கிழக்கு மாநிலங்களில் போரினால் பார்வையிழந்த, பார்வை இழப்புடன் ஏனைய உறுப்புக்களையும் இழந்த அனைவரையும், வன்னி பெரு நிலப்பரப்பில் பிறகாரணிகளால் பார்வையிழந்தவர்களையும் இணைத்து 278 பயனாளிகளுடன் எமது நிறுவனமானது கிளிநொச்சி விவேகானந்தநகர் என்ற இடத்தில் தலைமைச்செயலகத்தை அமைத்து சமூகசேவைகள் திணைக்களத்தின் கீழ் தன்னார்வ தொண்டு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு இயங்கிவருகின்றது. சமூக பொருண்மிய நெருக்கடிகளை எதிர்கொள்ளும் பார்வையற்ற குடும்பங்களின் கல்வி, மருத்துவம், வாழ்வாதாரம் போன்ற தேவைகளைக் கவனிப்பதும், இயலுமைக்கேற்ப பார்வையற்ற குடும்பங்களிலும், வறுமை உறுதிசெய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளது குடும்பங்களிலும், வறுமைக்கோட்டுக்குள் வாழும் சாதாரண குடும்பங்களிலும் கல்வி கற்கும் 200 மாணவர்களுக்குமான கல்வி மேம்பாட்டுத்திட்டத்தை முன்னெடுத்தல், உணவு நெருக்கடியை எதிர்கொள்ளும் பார்வைக்குறைபாடுள்ள மக்களுக்கான மாதந்தோறுமான உதவிக்கொடுப்பனவுகள் வழங்கல், முற்றாக பார்வையற்றவர்களுக்கான நிலையானவைப்பு திட்டங்களை ஏற்படுத்தல், வாழ்வாதார திட்டங்களை மேற்கொள்ளல், வீட்டு திருத்தங்கள் செய்துகொடுத்தல், கிணறு, கழிப்பறை அமைத்துக்கொடுத்தல், சலவை இயந்திரம் வழங்கல், நீர்வடிகட்டி வழங்கல் இயலுமைக்கேற்ப உலருணவுப்பொதி வழங்கல், கண்மாற்று மருத்துவத்திற்கு உதவுதல், கண்ணாடிகள் வழங்கல், மருத்துவக்கொடுப்பனவுகள் வழங்கல், சாகுச்சடங்குக்கு உதவுதல், மிதிவண்டிகள் வழங்கல், ஆதரவற்ற பார்வையற்ற பெண்கள், ஆண்கள் காப்பகம் நடாத்தல், அமரர் சுந்தரமூர்த்தி நினைவு பொதுநூலகமூடாக அறிவுசார் பணியை முன்னெடுத்தல், தொழிற்பயிற்சிகள் வழங்கல், கணினி பயிற்சி நெறிகளை முன்னெடுத்தல், வருமானமீட்டும் தொழில்துறைகளை ஏற்படுத்தி வேலைவாய்ப்பளித்தல், இசை நிகழ்வுகளூடாக ஆற்றுகைப்படுத்தல், வேளாண் நலத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல், மாற்றுத்திறனாளிகளது உரிமைகளுக்காக சமூக நிறுவனங்களோடு இணைந்து செயற்படல், போன்ற சமூக வலுவூட்டல் செயற்பாடுகளை எல்லோருடைய ஒத்துழைப்போடு நிறைவேற்றி வருகின்றோம்.**

**அந்தவகையில் எமது சங்க யாப்பின் 14.1ஆம் சரத்தில் குறிப்பிட்டதன் அடிப்படையில் நிர்வாகக்காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும். அதில் குறித்துரைத்தவாறு நிர்வாகத்தெரிவினை 30.05.2026 ஆம் கிளிநொச்சி மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர் திருப..சர்மிலன் தலைமையில் புதிய நிர்வாகத்தெரிவு இடம் பெற்றது .**

வன்னி விழிப்புலனற்றோர் சங்க நிர்வாக உறுப்பினர்களின் பதவி நிலைகள்

| தொ.இல | பெயர் | பதவிநிலை |
|---|---|---|
| 01 | திரு.கிருஸ்ணன் மகிந்தகுமார் | தலைவர் |
| 02 | திரு.பேரம்பலம் ஞானகுமார் | செயலாளர் |
| 03 | திரு.முருகேசப்பிள்ளை முரளிதரன் | பொருளாளர் |
| 04 | திரு.அருஸ்ரின் யஸ்ரின்பிரபாகரன் | துணைத்தலைவர் |
| 05 | திருமதி ரேகன் நிதிமலா | துணைச்செயலாளர் |
| 06 | திருமதி கிரிகரன் விஜயலட்சுமி | இயக்குனர் சபை உறுப்பினர் |
| 07 | திருமதி ராஜன் ரஜனி | இயக்குனர் சபை உறுப்பினர் |
| 08 | திரு. நடராசா புலந்திரன் | இயக்குனர் சபை உறுப்பினர் |
| 09 | திரு.குணரத்தினம் மணிசேகரம் | இயக்குனர்சபை உறுப்பினர் |
| 10 | திரு.செல்வரட்ணம் ராகவன் | காப்பாளர் சபை உறுப்பினர் |
| 11 | திரு.சிவபாதசுந்தரம் பிரதீபன் | காப்பாளர் சபை உறுப்பினர் |
| 12 | திருமதி சத்தியராஜ் பிரசாந்தினி | காப்பாளர் சபை உறுப்பினர் |
| 13 | திருமதி பகிரதன் வித்தியா | காப்பாளர் சபை உறுப்பினர் |
| 14 | திரு.கோபாலன் ரசிக்குமார் | காப்பாளர் சபை உறுப்பினர் |
| 15 | திரு.சுப்பன் சசிக்குமார் | எதிர்ச்சபை உறுப்பினர் |
| 16 | திருமதி .ஜெரின் ரேணுகா | எதிர்ச்சபை உறுப்பினர் |
| 17 | திரு.கந்தையா விஸ்வலிங்கம் | எதிர்ச்சபை உறுப்பினர் |
| 18 | திரு.லோகேஸ்வரன் கேதீஸ்வரன் | உள்ளகக்கணக்காய்வாளர் |

## இதன் பதிவுகள்


வன்னி விழிப்புலனற்றோர் சங்கம்
வடக்கு கிழக்கு மாகாணச் செயலகம்
වන්නි දෘශ්‍යාබාධිත සංගමය
උතුරු නැගෙනහිර පළාත් කාර්යාලය
Vanni Association For Visually Handicapped
North Eastern Provincial Office


උතුරු නැගෙනහිර පළාත් කාර්යාලය
Association For Visually Handicapped
North Eastern Provincial Office




ஆண்டுப்
பொதுக்
கூட்டமும்
நிர்வாகத்
தெரிவும்
2026


Vanni Association For Visually Handicapped
North Eastern Provincial Office


Vanni Association For Visually Handicapped
North Eastern Provincial Office
BOC - Kilinochchi Account No - 76003813
Reg.No :- NP/KN/KV/DS/VSSO/2016/23





**”நன்றி“**